V. SUBRAMANIAN,
B.Sc. (Hons.) [Chemistry],
Fellow of the Chemical Society,
M.A. (Politics).

3 OCT 1953

Central College, Jaffna
Ceylon. 1st october '53

ஐயா,

வணக்கம்பல.

தமிழினிடம், தங்களுக்குள்ள, ஆர்வத்தையும், விஞ்ஞான உலகில், உங்கள் மேன்மையான நிலையையும், - அயற்கையாக, உங்களுக்குள்ள, சௌலப்யத்தையும், நம்பி, - உங்களை முன்பின் பழகி அறிந்திராவிடினும் - உங்களிடம், ஒரு கோரிக்கை செய்துகொள்ளுகிறேன்.

இலங்கையில், தமிழார்வம் மிகுந்திருந்தாலும், - விஞ்ஞான விஷயங்களை, த்தமிழில் விளக்கும் பத்திரிகை இல்லை. அக்குறையைப் போக்க, - சில நண்பர்களின் உதவியுடனும், தமிழர்களிடமுள்ள நம்பிக்கையாலும் - 'விஞ்ஞானி' என்ற ஒரு மாதப்பத்திரிகையை, துவக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். முதல் இதழ் தீபாவளிக்குச்சற்று முன்னதாகவே, நவம்பர் முதலாம் தேதி வெளிக்கொண்டு வருவதாகத்திட்டம்.

உங்கள் தெள்ளியதமிழ்ப்பேச்சுக்களை, யாழ்ப்பாணம் தமிழ் விழாவில், தாங்கள் நிகழ்த்திய 'ஆய்வசக்தி' என்னும் சொற்பொழிவால் எல்லோரும், அறிந்துகொண்டார்கள்.

உங்களிடம் நான் வேண்டிக்கேட்பது, ஒரு கட்டுரை. இரண்டாயிரம் சொற்கள் கொண்டிருந்தால், சௌகரியம். அன்றி அதைவிட நீளமாகவும், உங்கள் விருப்பப்படி ஆக்கலாம். உங்களுக்கு இஷ்டமான, எந்த விஞ்ஞானப் பொருளைப்பற்றி வேண்டுமானாலும், எழுதுங்கள். சுருக்கமாகவோ நீட்டியோ உங்கள் விருப்பப்படியே எழுதுங்கள். தயவு செய்து, சற்று, மனம் வைத்து, எப்படியாகிலும்

ஒரு கட்டுரை, வரைந்து தருவீர்களாயின், எனக்கு மட்டுமின்றி, என்மூலமாக, எத்தனையோ வாசகர்களுக்கும், உதவி செய்வீர்கள்.

உங்களுக்கு வேலைப்பொறுப்பும், எத்தனையோ பல சிறு பொறுப்புகளும் இருந்தாலும், இடையில், சற்று எப்படியாவது, நேரம் பிடித்து எழுதுமாறு, கோருகிறேன். கட்டுரையை, அக்டோபர் 15ம் தேதிக்குள்ளாக, எழுதி அனுப்புவீர்களாயின், மிகவும் நன்று. தங்களுக்கு, இது விஷயமாக, யாழ்ப்பாணத் தமிழ் மகாநாட்டின் காரியதரிசி, ஸ்ரீமான் நவரத்னம். அவர்களையும் கடிதம் எழுதுமாறு, கேட்டிருக்கிறேன்.

இத்துடன் இரண்டாவது கோரிக்கையும், ஒன்று செய்து கொள்கிறேன். தாங்கள் யாழ்ப்பாணத் தமிழ் விழாவில், பேசும்போது, எடுத்த படம் ஒன்றையே, முதலாவதின் அட்டைப்படமாக, உபயோகிக்க, எண்ணியிருக்கிறேன். அந்தப்படத்தை, தங்களுக்கு இன்னும் ஒரு வாரத்தில், அனுப்புவேன். தயவுசெய்து, அதில், தங்கள் கையெழுத்தை தமிழில், வரைந்து தருவீர்களானால், இரண்டும் சேர்த்து, பிளாக்காக எடுக்க, நன்றாயிருக்கும்.

மறுபடியும், உங்கள், தமிழார்வத்தின் பெருமையும், இலக்கியத்திறமும் நம்பிக்கை வைத்து, உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். வணக்கம்.

உங்களைத் தூரநின்று, கண்டு மகிழும்,

வே. சுப்ரமணியன்.